# ஆயில்ய விழாவன்று அருள்மிகு நாகரம்மனுக்கு நாம் நிவேத்திய படுக்கையாக படைக்கவிருக்கும் கொழுக்கட்டைக்கு தேவைப்படும் பொருட்கள் விபரமும், தயார் செய்யும் முறையும்

1. சம்பா பச்சை அரிசி 750 கிராம்
2. நயம் கோட்டையம் சர்க்கரை 450 கிராம்
3. தேங்காய் (நடுத்தரம்) 1 எண்ணம்
4. ஏலம் 10 கிராம்
5. சுக்கு 10 கிராம்
6. மட்டி பழம் (பாகம் வந்தது) 1 எண்ணம்
7. தும்புவாழை இலை 1 (முதல் தரம்)
8. தென்னை குருத்தோலை இலைக்கு 11 வீதம் 2 எண்ணம்
9. கைதை நார் 11 எண்ணம்
10. கதம்பல் (தேங்காய் தொண்டு உலர்ந்தது) 5
11. நாகத்தகடு 5'x1' (அளவு) 1 எண்ணம்
12. நீள கைப்பிடி கொண்ட சட்டுவம் 1 எண்ணம்
13. முறம் (அளவு) 1 எண்ணம் (தீ பற்றவைக்க மற்றும் வீசுவதற்கு)

## தயார் செய்தல் (செய்முறை விளக்கம்)

1. பச்சை அரிசியை ஊறவைத்து உரலில் நன்றாக இடித்து (புட்டு மாவு பக்குவத்துக்கு) மாவாக்கி பின் நிழலில் உலர்த்தவும். (ஊறவைத்த 750 கிராம் அரிசி மாவாகி உலர்ந்தவுடன் ½ பக்கா (ஒரு நாளி) மாவிற்கும் சற்று கூடுதலாக கிடைக்கும்.)

2. ஒரு ராத்தல் சர்க்கரையை (450 கிராம்) துண்டுகள் இல்லாதவாறு உரலில் போட்டு இடித்து தனியாக எடுத்து வைத்துக்கொள்ளவும்.

3. ஒரு தேங்காயை துண்டுகள் இல்லாதபடி மெல்லியதாக துருவிக்கொள்வதோடு துருவிய தேங்காயினை (இரு

சிரட்டையிலும்) ஒவ்வொரு முறியிலும் சமபாதி எடுத்து நிரப்பிக்கொள்ளவும். (தேங்காய் பச்சையாகவோ, பளவடமாகவோ இல்லாமல் இரண்டு பருவத்திற்கும் இடைப்பட்ட நிலையில் இருத்தல் அவசியம்.)

4. ஏலம் 10 கிராம் மற்றும் சுக்கு 10 கிராம் ஆகியவற்றை தனித்தனியாக தூள்போல் பொடி செய்து கொள்ளவும்.

5. நல்ல பாகம் வந்த மட்டி பழத்தினையும் தனியாக எடுத்து வைக்கவும். (பழம் கறுக்காமலிருக்க படலையிலிருந்து அரியும்போது காம்புடன் அரிவது நலம்).

6. தும்பு வாழை இலையை ஈரம் இல்லாதவாறு நன்கு (கிழிந்துவிடாமல் பாதுகாத்து) கவனமுடன் துடைத்து சுத்தம் செய்து கொள்ளவேண்டும்.

7. கைதை நாரினை கொழுக்கட்டை கட்டுவதற்கு ஏற்றவாறு நனைத்து (கனம் குறையாமல்) பக்குவபடுத்தவும். (ஒரு கொழுக்கட்டைக்கு (3+4+4) 11 எண்ணம் கைதை நார் தேவைப்படும்.)

8. இரண்டு செட் தென்னை குருத்தோலைகளையும் 11+11 இலக்குகள் வீதம் ஓலை கிழிந்து விடாமல் ஈக்கிலை மட்டும் நன்கு கவனத்துடன் வகிர்ந்து எடுத்துக்கொள்ளவும்.

9. குருத்து ஓலைகளை தைத்து கட்டுவதற்கு ஏற்ற விதத்தில் பனைமுள் அல்லது ஈக்கிலை (தயார்) பக்குவபடுத்தி வைக்கவும்.

10. ஈக்கில் வகிர்ந்து எடுக்கப்பட்ட 11+11 குருத்து ஓலை இலக்குகளை பந்துபோல் சுருட்டி கட்டி வைக்கவேண்டும்.

11. 11+11 குருத்தோலை இலக்குகளை தலைமாற்றி, தலைமாற்றி கொழுக்கட்டை சுருட்டிகட்டும் நீள அகலத்திற்கு தக்கவாறு கவனமாக பனைமுள் (அல்லது) ஈக்கலால் பாய்போல் தைத்து கட்டவேண்டும்.